நாள்- 07.12.2023

**Case No. OS.222/2014 (PW1 cross )**

**PW1:** எம். சண்முகம்:– வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் 5ம் பத்தியில் 2013ம் வருடம் மேற்கொண்டு வீடு கட்டியபோது பிரதிவாதி ஆட்சேபணை செய்தார் என்று நான் சொல்லியிருந்தால் சரிதான். நானும் பிரதிவாதியும் தாக்கல் செய்துள்ள தனித்தனி வழக்குகளில் வழக்கு சொத்தின் சர்வே எண்.32(பி)/1 என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 2.18 ஏக்கர் என்றால் சரிதான். என் அப்பா பாண்டுரங்கனிடமிருந்து வா.சா.ஆ.2ன் கீழ் தாவா சொத்தில் 1 ஏக்கர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். பாண்டுரங்கன் துரைசாமி நாயக்கரிடம் கிரையம் பெற்றார் அதுதான் வா.த.சா.ஆ.1 என்றால் சரிதான். துரைசாமி நாயக்கர் அன்னம்மாள் என்பவரிடம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அன்னம்மாள் என்பவர் பிரதிவாதி கே.சண்முகம் என்பவருடைய அம்மா என்றால் சரிதான். அன்னம்மாள், அவருடைய மகன் பிரதிவாதி கே.சண்முகம் SC சமுதாயத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். பிரதிவாதி கே.சண்முகம் பாண்டுரங்கனிடமிருந்து 2 ஏக்கர் 18 செண்ட் நிலத்தை வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. போலி பத்திரங்களை பெற்று கிரையம் பெற்றுள்ளார். முதலில் பிரதிவாதி OS.458 OF 2013 வழக்கை என் மீது தாக்கல் செய்தார். நான் பிரதிவாதி மீது OS.222 OF 2014 வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி என் மீது வழக்கு தாக்கல் செய்தபிறகு பிரச்சணை ஏற்பட்டு வாழைப்பந்தல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை வழக்கு தாக்கல் செய்தற்கு முன்பு புகார் கொடுத்தார். அந்த புகாரில் பிரதிவாதி நாங்கள் வீடு கட்டக்கூடாது என்று சொல்லியிருந்தார் என்றால் சரியல்ல. அப்போது மாட்டுக் கொட்டகை கட்டினோம் அப்போது தான் புகார் கொடுத்தார். அ.த.சா.ஆ.3 வீட்டு வரி ரசீது எந்த சர்வே என்னுக்குரியது என்று குறிப்பிடவில்லை. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வீட்டு வரி ரசீது (05 வரிசைகள்) 2013ம் வருடத்திற்குரியது என்றால் சரிதான். இந்த 05 ரசீதுகளும் நெஞ்சாலை ரோடு, தட்டச்சேரி என்று உள்ளது என்றால் சரிதான். என் தரப்பில் 2001, 2004 மற்றும் 2005 ஆகிய ரசீதுகளில் நெடுஞ்சாலை ரோடு என்று இல்லை என்றால் சரிதான். என் பாட்டனார், என் அப்பா காலத்திலிருந்து தட்டச்சேரியில் வசிக்கிறேன் என்றால் சரிதான். வ.த.சா.ஆ.4 மின் கட்டண அட்டையில் உள்ள முகவரியில் நெடுஞ்சாலைரோடு என்று இல்லை தட்டச்சேரி என்று உள்ளது என்றால் சரிதான். என் தரப்பில் தாக்கல்

செய்யப்படும் ஆவணங்களில் 3, 4ன் படி தாவா சொத்தில் 2013க் கு முன்பு நான் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. OS.No.45 OF 2013 பாண்டுரங்கனின் வாரிசுகள் இராணிப்பேட்டை முன்சிப் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் கே.சண்முகள் தரப்பில் சாதகமாக தீர்ப்பு சொல்லப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் உடையார் வகுப்பை சேர்ந்தவர் என்றால் சரிதான். நாங்கள் SC பிரிவில் வரமாட்டோம் என்றால் சரிதான். தாவா சர்வே எண்ணில் உள்ள 2.18 ஏக்கர் டி.சி நிலம் அதை வாங்குவதற்கோ, விற்பதற்கோ, அனுபவம் செய்வதற்கோ எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கே.சண்முகம் SC பிரிவை சேர்ந்தவர் அதனால் அவர் அந்த டி.சி நிலத்தை வாங்கியுள்ளார் எனவே அவர் அனுபவம் செய்வற்கு உரிமம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என் மீது தாக்கல் செய்துள்ள OS.458 OF 2013 வழக்கை அனுமதித்தும் நான் பிரதிவாதி மீது தாக்கல் செய்துள்ள OS.222 OF 2014 வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:- இல்லை